பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

20 10 2024 **SUNDAY** **6.30 PM**

## மாநில செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. மருத்துவ படிப்புகளுக்கு கூடுதலாக 75 ஆயிரம் இடங்கள் வரும் ஐந்தாண்டுகளில் உருவாக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

2. விளையாட்டுத்துறையில் உலகின் முதல் பத்து நாடுகள் பட்டியலில் இந்தியா இடம்பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

4. விளையாட்டு வீரர்களுக்கு மூன்று சதவீத இடஒதுக்கீட்டின்கீழ், 100 பேருக்கு விரைவில் பணி ஆணை வழங்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

நாட்டில் அடுத்த ஐந்தாண்டுகளில் கூடுதலாக 75 ஆயிரம் மருத்துவப்படிப்புகளுக்கான இடங்கள் உருவாக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் இன்று ஆர் ஜெ சங்கரா கண் மருத்துவமனையை தொடங்கிவைத்து பேசிய அவர், நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் மருத்துவத்துறையில் பெரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மக்களுக்கு ஏற்ற வகையில் மலிவு விலையில் மருந்துகள் மற்றும் தரமான மருத்துவ சேவைகள் கிடைப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருவதாக அவர் கூறினார்.

நாட்டின் வடகிழக்கில் உள்ள பூர்வாஞ்சல் பகுதியில் 5 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்கள் அமைக்கப்பட்டு, ஏழை எளிய மக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் வழங்கப்பட்டு வருதாக தெரிவித்தார்.

இதனால் மக்களின் மருந்து செலவு 25 சதவீதம் குறைந்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மக்களின் நோய் எதிர்ப்பு திறனை மேம்படுத்துவதற்காக பல தடுப்பூசி இயக்கங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்திர தனுஷ் தடுப்பூசி இயக்கம் கொண்டுவரப்பட்டு, கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டதால், கோவிட் பெருந்தொற்றிலிருந்து அவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

வாரணாசியில் சங்கர நேத்ராலயா அமைத்துள்ள இந்த ஆர் ஜெ கண் மருத்துவமனையில் பல லட்சக்கணக்கான குழந்தைகள் மற்றும் முதியோர் பயன்பெறுவர் என்று அவர் கூறினார்.

பீகாரிலும் இதேபோன்ற மருத்துவமனையை அமைக்குமாறும் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், பிரதமர் திரு நரேந்திர மோடி கொண்டுவந்துள்ள வளர்ச்சித் திட்டங்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

வாரணாசியில் அமைக்கப்பட்டுள்ள 14-ஆவது சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையாக திகழும் இந்த மருத்துவமனையில் ஆண்டுக்கு 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு கண் அறுவை சிகிச்சை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

விளையாட்டுத்துறையில் உலகின் முதல் பத்து நாடுகள் பட்டியலில், இந்தியாவை கொண்டுவர மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரம் அருகே கௌடியாரில் இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தரம் உயர்த்தப்பட்ட கோல்ஃப் பயிற்சி மைதானத்தை திறந்துவைத்து பேசிய அவர், கோல்ஃப் விளையாட்டுக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் இந்தியாவில் உள்ளதாக தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சிபெற்ற இந்தியாவை உருவாக்க வேண்டுமெனில் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் திடகாத்திரமாக இருக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

நல்ல மனபலம் மற்றும் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

தமிழக அரசு பணிகளில் விளையாட்டு வீரர்களுக்கு மூன்று சதவீத இடஒதுக்கீட்டின்கீழ் 100 பேருக்கு விரைவில் பணி ஆணை வழங்கப்பட உள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற அரசின் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த மூன்றாண்டுகளில் 3 ஆயிரத்து 350 விளையாட்டு வீரர்களுக்கு 110 கோடி ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு சாம்பியன்சிப் அறக்கட்டளை மூலம், பாராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வென்ற நான்கு வீரர்களுக்கு ஐந்து கோடி ரூபாய் நலத்திட்ட உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மகளிர் தொழில் முனைவோருக்கு 96 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் பத்து கிலோமீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுவரும் புறவழிச்சாலை பணிகளை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - கே கே எஸ் எஸ் ஆர் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த நான்கு நாட்களுக்கு அநேக இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில்

அடுத்த 24 மணிநேரத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று அவ்வப்போது 55 கிலோமீட்டர் வேகம் வரை வீசக்கூடும் என்றும், சில நேரங்களில் 75 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மீனவர்கள் இப்பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சென்னையை பொறுத்தவரை அடுத்த 24 மணிநேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*__மாவட்டச் செய்திகள்__*

பசுமை பள்ளிகள் திட்டத்தின்கீழ், மரக்கன்றுகள் நடும் பணி இன்று சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சீர் மரபினர் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கான உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் வரும் 24-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

கரூர் மாவட்டம் தளவாபாளையம் தனியார் பொறியியல் கல்லூரியில் 500 நபர்கள் இடைவிடாது சிலம்பம் சுற்றியும், 32 மாணவ மாணவியர் ஐஸ்கட்டி, ஆணி, முட்டை, பானை ஆகியவற்றின் மேல் ஏறி சிலம்பம் சுற்றியும் மாபெரும் உலக சாதனை படைத்தனர்.

<<<<<<>>>>>

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலைப்பகுதியில் பெய்த கனமழையால் செய்யாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 200 ஏக்கருக்கும் மேற்பட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்தன.

<<<<<>>>>>

பட்டாசுகளை ரயிலில் கொண்டுசெல்லக்கூடாது என ரயில்வே காவல்துறையினர் திருப்பூர் ரயில் நிலையத்தில், பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

<<<<<<>>>>>

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே நங்கவள்ளி ஏரியில் துணி துவைக்க சென்ற மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

<<<<<<>>>>>

தருமபுரியில் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று, 107 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய நியூஸிலாந்து 2 விக்கெட் இழப்புக்கு 110 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 46 ரன்னுக்கும், இரண்டாவது இன்னிங்ஸில் 462 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 402 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<<<>>>>>

ஆசிய **Cross Country** தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா நான்கு தங்கம், மூன்று வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஹாங்காங்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் நடைப் போட்டியில் இந்தியாவின் **Gulveer Singh** தங்கப்பதக்கத்தையும், **Abhishek Paul** வெள்ளிப்பதக்கத்தையும், **Arun Rathod** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

<<<<<<>>>>>

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் குழுப் பிரிவு நடைப் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

இப்போட்டியின் தனிநபர் பிரிவில் வினோத் சிங் தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 10 மீட்டர் நடைப் போட்டியில் சீமா தங்கப்பதக்கத்தையும், சஞ்ஜீவனி ஜாதவ் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Dihora** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**<<<<<<END>>>>>**